Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் I.] 1941-ம் ஞு செப்டெம்பர் 5உ, வெள்ளிக்கிழமை. [இதழ் 25

## தொழிலாளர்களும், யுத்த ஆயுத உற்பத்தியும்.

### பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் பிரசங்கம்.

### "வெற்றியின் திறவுகோலைப்"ப்பற்றி மிஸ்டர் ஈடன் பேச்சு.

### சர் ட்க்ளஸ் பிரௌன்ரிக்கின் எச்சரிக்கை.

சென்ற திங்கட்கிழமை அமெரிக்காவில் "தொழிலாளர் நாள்" கொண்டாடப்பட்டது. அப்போது பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் ஒரு அருமையான பிரசங்கம் செய்தார். அந்தப் பிரசங்கத்தில், தொழிலாளர் இயக்கத்தின் விரோதிகளான ஹிட்லரையும், ஹிட்லரின் நாஸிக் கூட்டத்தையும் நசுக்குவதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ, அதை யெல்லாம் அமெரிக்கா செய்யவேண்டுமென்று அவர் கூறினார். பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் செய்த பிரசங்கத்தின் சில பாகங்கள் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன :—

"இந்த தொழிலாளர் நாளில், இந்த அமெரிக்க விடுமுறை நாளில், சுதந்தரத் தொழிலாளர்களின் உரிமைகளைக் கொண்டாடுகிறோம். இந்த உரிமைகளைப் பாதுகாப்பது இப்போது மிக முக்கியமான வேலையா யிருக்கிறது. உரிமைகளை அனுபவிக்கும் நமக்கு மாத்திரம் இது முக்கியமல்ல, நாகரீகத்தில் எதிர்கால முழுமைக்குமே அது மிக முக்கியம்.

"அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு ஒரு பிரம்மாண்டமான பொறுப்பு இருக்கிறது. எல்லா யுத்தங்களைவிட மிக முரட்டுத்தனமானதும், மிகக் கொடுமையானதுமான இந்த யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு அவர்கள்தான் உதவி செய்யவேண்டும். நம்முடைய தொழிற்சாலைகளிலும், வெடிகுண்டு சாலைகளிலும், ஏராளமான யுத்த ஆயுத சாமான்கள் செய்யப்படுகின்றன. உலகத்தில் உள்ள எல்லா யுத்த அரங்கங்களுக்கும், இரவும் பகலும், கடல் வழியாகவும், ஆகாய வழியாகவும், யுத்த சாமான்கள் அனுப்பப்படுகின்றன. குடியரசு ஆட்சியை நிலை நிறுத்துவதற்காக, அதிக வேகமானதும், மிகவும் பலம் பொருந்தியதுமான யுத்த ஆயுதங்களை அமெரிக்கா புதிது புதிதாகச் செய்துகொண்டு வருகிறது.

"நாம் ஏன் இப்படிச் செய்துகொண்டு வருகிறோம்? நம்முடைய தொழிற்சாலைகளின் முழு முயற்சியையும் ஏன் இந்த யுத்தத்தை நடத்துவதற்காகக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறோம்? யுத்தம் நம்முடைய கடற்கரைக்கு அருகில் வராதபோது, ஏன் இப்படிச் செய்கிறோம்?

"ஏனென்றால், ஹிட்லர், உலகத்தை அடிமைப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் செய்யும் பலாத்கார முயற்சி, நம்முடைய அடிப்படையான உரிமைகளை, தொழிலாளர் உரிமைகள் உட்பட, பாதிக்கிறது. அதற்காகத்தான், எல்லோரும் ஒற்றுமையுடன் இந்த மகா பெரிய முயற்சியில் உணர்ச்சியுடனும், உற்சாகத்துடனும் வேலை செய்கிறோம்.

### விரோதிகளின் பயனற்ற முயற்சி.

"நம்முடைய ஒற்றுமையைக் கெடுப்பதற்காகவும், நமக்குள் பிளவுகள் உண்டாக்குவதற்காகவும், நம்முடைய விரோதிகள் பிரயாசைப்பட்டார்கள். அதன் மூலமாக உள்ளிருந்தே நம்மை ஜெயிப்பதற்கு முயற்சி செய்தார்கள். அவர்களுடைய பிரயாசைகளும், முயற்சிகளும் வீணாயின.

"நமக்கு பலம் மிகுந்த கப்பற்படை இருக்கிறதென்பது இந்த விரோதிகளுக்குத் தெரியும்; அந்தப்பலம் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருகிறதென்பதும் தெரியும்; நம்முடைய பட்டாளங்கள் எல்லாவழிகளிலும் பலப்பட்டு வருகின்றன என்பதையும் அவர்கள் அறிவார்கள். இப்போது முக்கியமாகப் போர் செய்யும் வீரர்கள் அமெரிக்கத் தொழிற்சாலைகளில் யுத்த ஆயுத சாமான்கள் செய்பவர்கள் என்ற உண்மை அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சென்ற வருஷத்தில் அமெரிக்க ஆயுத உற்பத்தி ஏராளமான லாபங்களைக் காட்டியிருக்கிறதென்பதும், அந்த உற்பத்தி சாமான்கள் ஹிட்லரிசத்தை அழிப்பதற்காக யுத்த அரங்கங்களுக்குச் சென்றுகொண்டே யிருக்கின்றனவென்பதும், அவர்களுக்குத் தெரியும்.

"நம்முடைய மொத்த உற்பத்தியை இன்னும் அதிகப்படுத்தவேண்டும்; அவைகள் யுத்த அரங்கங்களுக்குச் செல்வதற்குத் தகுதியான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவேண்டும். இல்லாவிட்டால் இந்த விரோதிகள் பழைய மேடைகளிலும், புதிய மேடைகளிலும், தைரியத்துடன் முன்னேறிச் சென்று போர் புரிவார்கள்."

பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட், யுத்த முயற்சியை இரண்டு மடங்கு பலப்படுத்த வேண்டியது அவசியம் என்று கூறிவிட்டு, ஜெர்மனி வெற்றி பெற்றால் தொழிலாளர்களின் கதி என்னவாகும் என்பதைப் பற்றியும் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது :—

"தொழிலாளர்கள் தங்களுடைய பாதுகாப்புக்கும், முன்னேற்றத்துக்கும் சில கொள்கைகளையும், சில ஏற்பாடுகளையும், நிலை நிறுத்தி யிருக்கிறார்கள். அவைகளை ஜெர்மனி அடியோடு அழித்து விட்டது. தொழிலாளர் இயக்கம் என்பது ஹிட்லருடைய ஆட்சியின் கீழும் முசலோனியின் ஆட்சியின் கீழும் விலக்கப்பட்டது. ஏனென்றால், தொழிலாளர் இயக்கம் முழு பேச்சுச் சுதந்தரம், சமாதானக் கூட்டம் இவைகளின் மேல் ஏற்படுத்தப்பட்டது. தொழிலாளர் இயக்கத்தினால், ஒவ்வொரு உழைப்பாளிக்கும் கௌரவம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் ஹிட்லருக்கு இந்த முறை பிடிக்கவேயில்லை. அதனால் தான் தொழிலாளர் சங்கங்களெல்லாம் ஹிட்லரால் கலைக்கப்பட்டன."

### தொழிலாளர்களின் கடமை.

முடிவாக, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறியதாவது :—"நாஸிஸத்தைத் தோற்கடிப்பதில் மற்றவர்களைவிட தொழிலாளர்களுக்கு அதிக அக்கரை இருக்கவேண்டும். நாம் இதுவரைக்கும் பெரிய காரியங்களைச் சாதித்திருக்கிறோம். இனிமேல், இன்னும் அதிகமாக, காரியங்களைச் சாதிக்கவேண்டியிருக்கிறது.

"ஒரே நோக்கத்துடனும், தியாக புத்தியுடனும், நாம் இன்னும் அதிகமாக யுத்த சாமான்கள் உற்பத்தி செய்யவேண்டும். அப்படிச் செய்தால் மனித வர்க்கத்தின் கஷ்ட கால அளவு குறைந்துவிடும். நாம் தயங்கக்கூடாது; நமக்கு முன்னிருக்கும் பிரம்மாண்டமான வேலையில் நாம் ஒரு சிறிதும் பின் வாங்கக்கூடாது.

"நாம் உண்மையாகவும், நன்றாகவும், நமது கடமையைச் செய்தோம், என்று பிற்காலத்தில் வரப்போகும் அமெரிக்க பிரசிடெண்ட், மற்றொரு தொழிலாளர் தினக்கொண்டாட்டத்தில் கூறும்படி, நாம் நடந்துகொள்வோமாக!"

பிரசிடெண்ட் ரூஸ்வெல்டின் உணர்ச்சி மிகுந்த பிரசங்கத்தில், மேலும் மேலும் வற்புறுத்திக் கூறியிருக்கிற விஷயம், யுத்த சாமான்கள் உற்பத்தி அதிகப்படுத்தப்படவேண்டும் என்பதுதான். இதே விஷயத்தை வற்புறுத்தி, பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி, மிஸ்டர் அந்தோனி ஈடன் சென்ற

சனிக்கிழமை கவண்ட்ரி என்ற இடத்தில் செய்த பிரசங்கத்தில் கூறியிருக்கிறார். அவர் கூறியதாவது :—

"யுத்த சாமான்கள் குறைவாக வைத்துக்கொண்டு யுத்தம் செய்வதால், உயிர்ச்சேதமும், சாமான் சேதமும் அதிகமாக உண்டாகும். சென்ற வெய்யிற் காலத்தில், பிரான்சில் நடந்த யுத்தத்தில், நேச தேசத் துருப்புகளுக்கு, ஜெர்மனிக்கு இருந்த ஆயுத பலம் இருந்தால், இப்போது நிலத்தில் இரண்டு போர் அரங்கங்களில் ஜெர்மனி, சண்டை செய்துகொண்டிருக்கும். ஏராளமான யுத்த முஸ்தீப்புத் தளவாடங்கள் இருப்பதுதான், சிக்கனமாக யுத்தம் நடத்துவதற்கு வழி. ஜெர்மானியர்களுக்கு இருக்கும் யுத்த சாமான்களுக்குச் சமமாக நம்முடைய சிப்பாய்களுக்குச் சாமான்கள் தயாராகும் வரையில் நாம் சும்மா யிருக்கக் கூடாது. நம்முடைய சிப்பாய்களுக்குத் தகுந்த யுத்த ஆயுதங்கள் கொடுத்தால், அவைகளை நன்றாக உபயோகித்து, அவர்கள் காரியத்தைச் சாதிப்பார்கள் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை".

## வெற்றிக்கு அனுகூலம்.

யுத்த ஆயுதங்கள் அதிகமாக இருந்தால், வெற்றிக்குச் சிறந்த அனுகூலம் என்பதை மிஸ்டர் ஈடன் ஒரு உதாரணத்தால் விளக்கிக்காட்டினார். பிரிட்டிஷ் விமானப்படைக்கு ஏராளமான விமானங்கள் வேண்டியிருந்தது. வேண்டிய விமானங்களைத் தயார்செய்து கொடுத்தவுடன், ஜெர்மன் விமானப்படையுடன் கடும்போர்செய்து, பிரிட்டிஷ் விமானப்படை அநேக வெற்றிகளை அடைந்திருக்கிறது. அதைப்போல, தகுந்த யுத்த முஸ்தீப்புடன் இருந்தால், பிரிட்டிஷ் தரைப்படைகளும், அப்படிப்பட்ட வெற்றிகளை யடையும் என்று மிஸ்டர் ஈடன் கூறினார். மேலும் அவர் கூறியதாவது :—

"யுத்த ஆயுத உற்பத்தித்தான் வெற்றியின் திறவுகோல். நேசதேசத்தார்களும், அவர்களுக்கு உதவி செய்யும் நாடுகளும், உற்பத்திசெய்யும் சாமான்கள், வேண்டிய அளவுக்கு இன்னும் குறைவாகவே இருக்கிறது. யுத்தம் உலகமுழுவதும் பரவினால், இன்னும் அதிகமான சாமான்கள் வேண்டியிருக்கும்."

லெப்டினண்ட்-ஜெனரல் சர் டக்ளஸ் பிரௌன்ரிக் என்பவரும், ஆயுத உற்பத்தி சம்பந்தமாக தன்னுடைய அபிப்பிராயத்தைக் கூறியிருக்கிறார். ஜெர்மனி ரஷ்யாவில் யுத்தம் செய்துகொண்டிருக்கும்போது, நேசதேசத்தார்கள் மேற்கு ஐரோப்பாவை ஏன் தாக்கக்கூடாது, என்ற கேள்வி கேட்கப்படலாம். ஆனால், ஜெர்மன் விமானப்படையைவிட பிரிட்டிஷ் விமானப்படை அதிக பலத்துடன் இருந்தால்தான், மேற்கு ஐரோப்பாவைத் தாக்கலாம், என்று அவர் கூறுகிறார். எப்படி பிரிட்டிஷ் கப்பற்படை அச்சுநாடுகளின் கப்பற்படையைவிட அதிக பலம்பொருந்தியிருக்கிறதோ, அதேமாதிரியாக பிரிட்டிஷ் விமானப்படை இருக்கவேண்டும்; அப்படியில்லாமல், இப்போதிருக்கும் நிலைமையில் மேற்கு ஐரோப்பாவைத் தாக்கினால், ஹிட்லருடைய வலையில் நாம் வலுவில்போய் அகப்பட்டுக்கொள்வதாகும் என்று சர் டக்ளஸ் பிரௌன்ரிக் அபிப்பிராயப்படுகிறார். நம்முடைய விமானப்படை பலம் அதிகமாவதற்குள், ஜெர்மனியின்மேல், விமானத்தாக்குதல்களை அதிகப்படுத்துதல் தப்பானகாரியம் என்று அவர் எச்சரிக்கை செய்கிறார். ரஷ்யர்கள் தைரியமாக எதிர்த்துப் போர் புரிந்துகொண்டிருக்கிற இந்த சமயத்தில், பிரிட்டிஷ் மக்கள் யுத்த ஆயுத உற்பத்திசெய்வதிலும், ராணுவப்பயிற்சி பெறுவதிலும், தரைப்படைகளைத் தயார் செய்வதிலும், தங்களுடைய முழு கவனத்தையும் செலுத்தவேண்டும். இப்போது, விமானப்போரில், பிரிட்டன் முன்னேறிச் சண்டைசெய்து வருகிறது. மற்றத்துறைகளிலும், இதேமாதிரி செய்வதற்கு, ஆயுத உற்பத்தி அதிகப்படவேண்டும்.

## இரண்டு வருஷ படிப்பினை.

கூடிய சீக்கிரத்தில், அமெரிக்காவில் யுத்த ஆயுத உற்பத்தி 'டைரக்டரான' மிஸ்டர் ஜான் பிக்காஸ் இங்கிலாந்துக்கு வருவார். பிரிட்டிஷ் உற்பத்தித் திட்டத்தையும், அமெரிக்க உற்பத்தித் திட்டத்தையும் ஒன்றுசேர்த்து ஒழுங்குபடுத்தும் வேலையை அவர் செய்வாரென்று தெரிகிறது.

யுத்தத்தின் மூன்றாவது வருஷ ஆரம்பத்தில், கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்று. யுத்த ஆயுதங்கள் உற்பத்தி செய்யவேண்டும்; அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும்; இன்னும் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும். பீரங்கிகள், டாங்கிகள், ஆகாய விமானங்கள், யுத்தக்கப்பல்கள் ஏராளமாகத் தயார் செய்யவேண்டும். இதுதான் நமக்கு சென்ற இரண்டு வருஷங்களின் முக்கியமான படிப்பினை.

# வைசிராயின் ரேடியோ பேச்சு.

யுத்தம் ஆரம்பமாகி இரண்டு வருஷங்கள் ஆய்விட்டன. மூன்றாவது வருஷம் ஆரம்பமான தினத்தில் மேன்மை தங்கிய வைசிராய் ரேடியோ மூலம் பேசினார். அவர் பேச்சின் சாராம்சமாவது :—

இரண்டு வருஷங்களில் யுத்தம் நம் தேசத்துக்கு வெகு சமீபமாக வந்துவிட்டது—ஒரு திக்கிலிருந்து மட்டும் அல்ல. ஆனால் இந்தியா உறுதியாயிருக்கிறது. இந்தியாவின் வாலிபர்கள் சமுத்திரத்திலும், நிலத்திலும், ஆகாயத்திலும் சேவை செய்ய முன் வந்திருக்கிறார்கள். யுத்த தளவாடங்களை உண்டு பண்ண இந்தியாவின் தொழிற்சாலைகள், ஆலைகள் கப்பல் தளங்கள் ஆகியவைகள் இரவும் பகலும் வேலை செய்கின்றன. மன்னர்களும் ஜனங்களும் தாமாகவே யுத்தத்தின் செலவுக்காக பணத்தைக் கொட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இந்தியாவின் பிரஜைகள் ஆயிரக்கணக்கில் தங்கள் வீடுகளைக் காக்கவும் பொது ஜன அமைதியைக் காக்கவும் முன் வந்திருக்கிறார்கள்.

இந்தியா விழித்துக்கொண்டிருக்கிறது. அது பலமுள்ளது; சக்தி வாய்ந்தது. நீங்கள் மனது வைத்தால் இன்னும் சக்தி வாய்ந்ததாக இருக்கும். இந்தியாவிலுள்ள ஆண்களே! பெண்களே! உங்களுடைய பிள்ளைகள், சகோதரர்கள் இவர்களைப் பற்றி பெருமைப்படுங்கள்.

கலப்பையைத் தொடாமல் பயிரை அறுவடை செய்ய விரும்புகிறவர்கள் போல், சிரமப்படாமல் ஜயம் பெற விரும்புகிறவர்கள் நம் மத்தியில் இருக்கிறார்கள். தேசம், மிக அபாயமான நிலையில் இருந்தபோதிலும் யாதோ ஒரு காரணத்துக்காக ஜனங்களுள் பிளவு ஏற்படுத்தவும் யுத்த முயற்சியைக் குலைக்கவும் நம்பிக்கையைக் குறைக்கவும் வெட்கமின்றி வேலைசெய்துவருகிறார்கள். ஆனால் இது இந்தியாவின் இயல்பு அல்ல. இந்த ஐந்தாம்படை உங்களுடைய உறுதியைக் குலைக்காமல் இருக்கும்படி உங்களை மிகவும் கேட்டுக்கொள்கிறேன். ஒற்றுமையுடன் இருங்கள். உறுதிகொள்ளுங்கள். முயற்சி செய்யுங்கள்.

பிரிட்டன், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், நமது நேசக் கட்சி இவர்கள் பலமாகத்தாக்கப்பட்டுள்ளனர். ஆனால் நாமும் பலமாக எதிரியைத் தாக்கியிருக்கிறோம். 12 மாதங்களுக்கு முன் இருந்த நிலைமையைவிட இன்றய நிலைமை எவ்வளவோ அசைக்க முடியாதது. ஆனால் முடிவடைந்து விட்டதென்று சொல்லுவதற்கு இல்லை. வெகு நீளமும் கடுமையாயுமுள்ள பாதையில் பாதிதூரம் கூட போயிருக்கமாட்டோம். இன்னும் பலமாதங்களுக்கு நாம் கஷ்டப்படவேண்டும், வேலை செய்யவேண்டும், தியாகம் செய்யவேண்டும். இது நிச்சயம். நம்முடைய முழு தைரியத்தையும், உறுதியையும், நம்பிக்கையையும், பொறுமையையும் காண்பித்து கடவுள் உதவியால் கடைசியில் நாம் வெற்றி பெறவேண்டும். நீங்கள் உங்களால் ஆனதையெல்லாம் செய்கிறீர்கள் என்று நினைத்தால், அதைப்போல் இரண்டு மடங்கு செய்யுங்கள். நீங்கள் உங்களால் முடியுமளவு வேலை செய்கிறீர்கள் என்று நினைத்தால் அதைவிட இரண்டு மடங்கு வேலை செய்யுங்கள்.

உங்களுடைய சொந்த முயற்சி, கொடை, உதவி இவைகள் மிகவும் வேண்டியிருக்கின்றன. அவை பாராட்டப்படுகின்றன இதை நம்புங்கள்.

நாஜியும் அவனுடைய வேலைகள் முழுவதும் இந்த உலகில் அடியோடு அழிக்கப்படவேண்டும். உறுதியுடன் இருங்கள். லக்ஷியத்திலேயே கண்ணுயிருங்கள். உற்சாகத்தோடு இருங்கள். நமஸ்காரம். கடவுள் உங்கள்பக்கம் இருப்பார்.

# இந்திய சேனதிபதியின் பேச்சு.

இந்திய சேனதிபதி ரேடியோ மூலம் பேசிய பேச்சின் சாராம்ஸமாவது :—

இந்த இரண்டு வருஷங்களில் நாம் சில உதைகள் வாங்கியிருக்கிறோம் ஆகிலும் நாம் இன்னும் நிமிர்ந்து நிற்கிறோம். முன்னிலும் பலம்பெற்றிருக்கிறோம். நாம் இன்னும் வெகுதூரம் போகவேண்டும். கஷ்டதசையையும் கடக்கவேண்டும். ஆனல் எதிரி பலஹீனமாகி வருகிறன் என்பதற்கு அநேக அறிகுறிகள் ஏற்பட்டு இருக்கின்றன.

ஒரு வருஷத்துக்குமுன் பிரிட்டனைப் பிடிப்பதற்கான யுத்தம் நடந்துகொண்டிருந்தது. யுத்தத்தின் முடிவு தராசுமுனையில் தொங்கிக்கொண்டிருந்தது. இங்கிலீஷ் கால்வாயின் அக்கரையில் ஏராளமான ஜெர்மன் சைனியங்கள், ஆங்கில ஆகாயப்படை முறியடிக்கப்பட்டவுடன் இங்கிலாந்தைப் படையெடுக்கக் காத்துக்கொண்டிருந்தன. இன்றோ நாம் எதிரியால் கைப்பற்றப்பட்ட தேசங்களிலும், ஜெர்மனியிலேயே வெகுதூரம் வரையிலும் ஆகாய யுத்தம் செய்கிறோம்.

ஒரு வருஷத்துக்கு முன் மத்திய கிழக்கில் நிலைமை ஆபத்தாயிருந்தது. இன்றோ இத்தாலிய ஆப்பிரிக்கா சாம்ராஜ்யம் ஒழிந்தது.

ரஷ்யாவில் சில பாகங்களில் ராணுவநிலைமை ஆபத்தாயிருக்கிறது. ஆனல் முழுமோசமாயில்லை. ரஷ்யாவை வெகுசீக்கிரத்தில் படுத்துவிடும் என்று ஜெர்மனி நம்பியிருந்தது. ஆனல் இது நடைபெறவில்லை. இன்னும் 2 மாதங்களில் எல்லாரும் பயப்படுகிற மாரிகாலம் ஆரமபித்துவிடும். எப்பொழுதும் ரஷ்யாவுக்கு மிகவும் உதவியாயிருக்கிற டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி எனும் ஜெனரல்களின் உதவியை அது பெறும்.

ஒரு வருஷத்துக்கு முன் ஜெர்மனியின் ஐந்தாம் படையின் யுக்திகளினல் ஜனங்கள் வெலவெலத்துப் போய்விட்டார்கள். இப்பொழுது இந்த யுக்திகளை எல்லாரும் அறிந்துகொண்டு விட்டார்கள்.

ஒரு வருஷத்துக்கு முன் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் இவைகள் சேர்ந்து மூன்று வல்லரசுகள் ஒப்பந்தத்தை அப்பொழுதுதான் செய்து முடித்தார்கள். அமெரிக்காவிலுள்ள ஜனங்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தோல்வியைத்தவிர்க்க முடியுமோவென்று மிகவும் சந்தேகப்பட்டார்கள். ஆனல் இன்று அமெரிக்காவில் பொதுஜன அபிப்பிராயம் மனப்பூர்வமாய் நம் பக்கமே இருக்கிறது. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டோடு அமெரிக்கா சேர்ந்து கிழக்கே ஜப்பானின் ஆக்கிரமிப்பைத்தடுக்க ஏற்பாடு செய்துகொண்டு வருகிறது. யுத்த தளவாடங்கள், ஆயுதங்கள், ஆகாய விமானங்கள், கப்பல்கள் இவைகளின் உற்பத்தி மாதாமாதம் அதிகமாய்க்கொண்டு வருகிறது.

ஆகையினல், நான் சமர்ப்பிக்கும் வரவு செலவு கணக்கு மோசமாயிருக்கவில்லை. எதிரி ஜெயிக்கப் படவில்லை. ஆனல் அவனை பின்னல் ஜெயிப்பதற்கு வேண்டிய வேலைகளுக்கு நாம் அஸ்திவாரம் போட்டுவிட்டோம்.

லக்ஷத்துக்கு மேற்பட்ட இந்திய சிப்பாய்கள் இன்றைக்கு வெளி தேசங்களில் இருக்கிறர்கள். இந்த சிப்பாய்களின் மொத்த தொகை கிட்டத்தட்ட 10 லக்ஷம். சிறு யுத்தக் கப்பல்கள் அநேகம் இந்தியாவில் கட்டப்படுகின்றன. இந்தியாவின் ஆகாயப்படை விருத்தியடைந்துகொண்டு வருகிறது. ஆனல் நான் விரும்புமளவுக்கு அது விருத்தியடையவில்லை. ஆகாய விமானங்கள் இந்தியாவில் செய்யப்படுகின்றன. இந்தியாவில் செய்யப்பட்ட முதல் விமானம் ஏற்கெனவே பறக்க விடப்பட்டாய் விட்டது.

இந்தியாவில் எப்பொழுதும் சிப்பாய்களுக்குப் பஞ்சமில்லை. இப்பொழுது அது பெரிய யுத்த தளவாட சாலையாகவும் ஆகி வருகிறது. போன 12 மாதங்களில் ரொம்ப அபிவிருத்தி ஏற்பட்டு இருக்கிறது. ஒரு வருஷத்துக்குமுன் தான் இந்திய தொழிற்சாலைகள் உற்பத்திசெய்ய ஆரம்பித்தன. இப்பொழுது அவைகள் இந்தியாவின் துருப்புகளுக்கு மட்டுமல்ல இதர சாம்ராஜ்ய நாடுகளின் துருப்புகளுக்கும் எல்லாவிதமான ஆயுதங்களையும் உற்பத்தி செய்கின்றன.

யுத்தம் இந்தியாவுக்கு சமீபத்தில் வந்து விட்டது ஒருவிதத்தில் நன்மையே. ஆனல் நான் ஒரு விஷயத்தை வற்புறுத்தவேண்டும். இந்தியாவுக்கு வெளியேயுள்ள நம்முடைய சிப்பாய்கள் தான் இந்த தேசத்தை படையெடுப்பு கோரத்திலிருந்தும் வெடிகுண்டு அபாயத்திலிருந்தும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறர்கள்.

இந்தியாவைக் காப்பதற்கான ஏற்பாடுகள் போன வருஷத்தில் வெகு தீவிரமாயும் சீக்கிரமாகவும் செய்யப்பட்டு இருக்கின்றன. எவ்வளவோ காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனல் நம்முடைய முயற்சியை எந்தவிதத்திலும் தளர்த்த வேண்டுமென்பது இதனுடைய அர்த்தமல்ல. ஜாதி, மத, வகுப்பு வித்தியாசமில்லாமல், எல்லாத் துறைகளிலும் ஒவ்வொருவரும் உதவி செய்ய வேண்டும். இந்தியாவிலுள்ள நம் எல்லோருடைய ஏகோபித்த முயற்சியினலேயே இந்தியாவின் ஜனங்கள் பயமில்லாமல் வாழலாம். அவர்களுடைய பெரிய தேசத்தை அமைதியாக செழிப்புறச்செய்ய அவர்களுக்கு உதவி செய்யலாம்.

---

# கொள்கைப்போராட்டம்: 2-வது வருஷக் கொண்டாட்டம்.

## சென்னை கவர்னரின் பிரசங்கம்.

### யுத்தமும், இந்தியாவின் நிலைமையும்.

### வெற்றிக்கனுகூலமான விஷயங்கள்.

1939-ம்ஞு செப்டெம்பர்மீ 3உ, பிரிட்டன் இந்த யுத்தத்தில் ஈடுபட்டது. சுதந்தரக் கொள்கைக்காகவும், ஏதேச்சாதிகாரக் கொள்கைக்கு எதிரிடையாகவும், பிரிட்டன் ஜெர்மனியோடு போர் தொடுத்தது. சென்ற புதன்கிழமை (செப்டெம்பர்மீ 3உ) இந்தக் கொள்கைப் போராட்டத்தின் இரண்டாவது வருஷப் பூர்த்திக்கொண்டாட்டம் இந்தியாவிலும், உலகத்தின் பல பாகங்களிலும் நடைபெற்றது. சென்னையில், "செனெட் ஹவுஸ்" மாளிகையில் ஒரு பெரிய பொதுக்கூட்டம் கூடியது. சென்னை கவர்னர் மேன்மைதங்கிய சர் ஆர்தர் ஹோப் அவர்கள் இரண்டு வருஷ யுத்த சம்பவங்களைப்பற்றி விவரித்துக்கூறி, இப்போது நடக்கும் ரஷ்ய யுத்தத்தின் முக்கியத்தைப் பற்றி விளக்கிக்காட்டினர். கவர்னர் பிரபு அவர்களுடைய பிரசங்கத்தின் சில பாகங்களின் சாராம்சம் கீழே தரப்பட்டிருக்கின்றது :—

உலக சரித்திரத்திலேயே மிக வருத்தப்படும்படியான சம்பவத்தைக் கொண்டாடுவதற்காக நாம் இங்கு கூடியிருக்கிறோம். ஒரு தனிப்பட்ட மனிதனுடைய கெட்ட புத்தியினலும், பேராசையினலும் உலகம் இந்த யுத்தத்தில் ஆழ்த்தப்பட்டது. நாகரீகத்தின் சுதந்தரத்தைக் காப்பதற்காக, பிரிட்டனும், பிரான்சும் 1939-ம்ஞு செப்டெம்பர்மீ 3உ ஜெர்மெனியோடு போர் தொடுத்தன. உலகத்திலேயே இதுவரை பார்த்திராத பிரம்மாண்டமான யுத்தம் அப்போதுதான் ஆரம்பித்தது. இரண்டு வருஷத்திற்குப்பிறகு, நாம் சில விஷயங்களை கவனிக்க வேண்டியது பொறுத்தமான காரியம். "இந்த இரண்டு வருஷங்களில் என்ன நடந்தது? இப்போது என்ன நடக்கிறது ? இனிமேலும், அதற்குப் பின்னும் என்ன நடக்கலாம் ? இவைகளைப்பற்றி நாம் இப்போது கவனிக்கலாம்.

இந்த நாட்டில், யுத்தத்தின் ஆரம்பகாரணத்தைப் பற்றி அநேகர் தவறன அபிப்பிராயம் கொண்டிருக்கிறர்கள். இந்த யுத்தம் இரண்டு ஏகாதிபத்தியங்களின் சண்டை என்றும், இதற்கும் நாக

ரீகத்துக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். ஹிட்லரும், ஹிட்லருடைய கொள்ளைக் கூட்டமும் ஒவ்வொரு நாடாக அடிமையாக்கி, உலகத்தையே கைப்பற்ற வேண்டும் என்ற பேராசையுடன் இந்த யுத்தத்தை ஆரம்பித்தார்கள். அந்தபேராசை நிறைவேறுவதைத்தடுத்து, ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் ஒழுங்காக நல்வாழ்வு வாழவேண்டிய நிலைமையை ஏற்படுத்துவது எல்லோருடைய கடமையாகும்.

## இந்தியத்துருப்புகளின் வெற்றி.

ஹிட்லருடைய பேராசை, ஒன்றின்பின் ஒன்றாக வேவுகாரர்களின் உதவியைக்கொண்டு, பல நாடுகளை விழுங்கிவிட்டது; ஏறக்குறைய ஐரோப்பா முழுவதும் ஹிட்லரால் கைப்பற்றப்பட்டது. தற்காலிகமாக வெற்றி ஏற்பட்டாலும், ஏராளமான உயிர்ச்சேதம் உண்டாயிருக்கிறது, ஹிட்லருக்குத் துணையாகவந்த இத்தாலி லட்சக்கணக்கான மனிதர்களை இழந்துவிட்டது. போன வருஷம் இந்த மாதம் உயிருடன் இருந்த இரண்டு பெரிய இத்தாலியப்பட்டாளங்கள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. ஆப்பிரிக்காவில் பிரிட்டன் பெரிய வெற்றிகளை அடைந்தது, ஒருபெரிய அளவுக்கு இந்தியத்துருப்புகள் காட்டிய சிறந்த தைரியமும், திறமையும் தான் இந்த வெற்றிகளுக்குக் காரணம். இப்போது, இத்தாலிய கிழக்கு ஆப்பிரிக்காவும் பிரிட்டிஷ் சோமாலிலாந்தும் பிரிட்டனால் கைப்பற்றப்பட்டன. இதல்லாமல், சிரியா, இராக், இரான் முதலிய நாடுகளில் ஜெர்மானியர்கள் செய்துவந்த சூழ்ச்சிகளை, பிரிட்டன் கெடுத்துவிட்டது. இந்தியாவின் எல்லையிலிருக்கும் இரானில், பிரிட்டிஷ் துருப்புகளும், ரஷ்யத் துருப்புகளும் பிரவேசித்து, ஜெர்மனியின் தந்திர முயற்சிகளைப்பாழாக்கிவிட்டன.

ரஷ்யாவில் இப்போது பிரம்மாண்டமான யுத்தம் நடக்கிறது. ஜெர்மனி, ரஷ்யாவை ஏன் தாக்கிற்று ?

ஜெர்மனி கிழக்கு நோக்கிச் செல்வதற்கு ரஷ்யா ஒரு பெருந்தடையாயிருக்கி[illegible], ரஷ்யாவைத் தோற்[illegible]ருந்து. ஆகையால் என்று [illegible]டிக்கவேண்டியது அவசியம் [illegible] நினைத்தது. அப்போது தான், இராக், இரான், ஆப்கனிஸ்தான், இவைகளின் மூலமாக இந்தியாவுக்கு வரலாம் என்று ஜெர்மனி முடிவு செய்திருந்தது.

இதல்லாமல், பிரிட்டனோடு போர் புரிந்து வெற்றி பெற முடியாமற்போகவே, ஜெர்மனிக்கு கிழக்கு நோக்கிப் போவதைத்தவிர வேறு மார்க்கம் இல்லாமற் போய்விட்டது. ஆனால், அதிக காலமாக ரஷ்யாவில்செழிப்பான மாகாணமாகிய யூக்ரேயினின் கோதுமையின் மேலும், காகசஸ் பிரதேசத்தில் உள்ள பெட்ரோல் எண்ணெய்களின் மேலும், ஜெர்மனி கண்ணோட்டம் வைத்திருந்தது.

## ரஷ்ய யுத்தம்.

ரஷ்ய யுத்தம் ஆரம்பித்து பத்து வாரங்களாய் விட்டன. ஆனால் ஜெர்மனி பிரமாதமான காரியம் ஒன்றும் செய்யமுடியவில்லை. ரஷ்யாவில் முக்கியமான இடம் ஒன்றையும் பிடிக்கவில்லை. சில மைல் தூரமுள்ள நிலத்தைப் பிடித்துவிட்டது ஒரு பெரிய காரியமல்ல ; ரஷ்ய பட்டாளத்தையும் யுத்த பட்டாளங்களையும் ஜெர்மனியால் அழிக்க முடியவில்லை. ரஷ்யாவின் பூகோள படத்தைப்பார்த்தால் ஜெர்மனி ஒரு நக அளவுக்குத்தான் முன்னேறி யிருக்கிறது. ரஷ்யர்கள் தங்களுடைய துருப்புகள், டாங்கிகள் ஆகாய விமானங்கள், யுத்த தளவாடங்கள், இவைகளை யெல்லாம் அழிக்கப்படாமல் வைத்திருக்கிறார்கள் ; அவர்களுடைய ஒழுங்கு முறையும், கட்டுப்பாடும் அப்படியே யிருக்கின்றன ; உணவுப் பொருள் 'சப்ளை' யும் தடையில்லாமல் வந்து கொண்டிருக்கிறது. ரஷ்யர்கள் பின் வாங்கிச் செல்கிறார்கள் ; பிறகு முன்னேறி ஜெர்மனியர்களைத் தாக்கி அவர்களுடைய போக்குவரவு சாதனவழியை வெட்டி விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்படியே செய்துகொண்டுவந்தால் ரஷ்யாவுடைய பெரிய நண்பனுகிய மழைக்காலம் நெருங்க, நெருங்க வந்து கொண்டிருக்கிறது. பனியால் உறைந்தநிலம்; அடர்த்தியான காடுகள், கரிக்கப்பட்ட வயல்கள், வெட்டார வெளிகள்—இவைகளெல்லாம் ரஷ்யாவுக்கு அனுகூலமானவை.

எந்த நாளில் ரஷ்யாவை ஜெர்மனி தாக்கியதோ, அந்தநாள் யுத்தத்தின் போக்கு மாறியநாள் என்று நான் நம்புகிறேன். பாதையின் கடைசியை ஜெர்மனி சேருவதற்கு அதிக காலம் பிடிப்பதாயிருந்தாலும், பாதையின் முடிவு இப்போது நமக்குத் தெரியாமல் இருந்தாலும், முடிவான பாதைக்கு ஜெர்மனி வந்துவிட்டதென்பதை நான் பூரணமாக நம்புகிறேன்.

## ஒரே சமயத்தில் பல வேலை.

ஒரே சமயத்தில் ஜெர்மனி பல வேலைகளைச் செய்ய வேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டது. தான் ஆக்கிரமித்த நாடுகளைப் பாதுகாக்கவேண்டும். அந்த நாட்டு மக்களுக்கு உள்ள ஜெர்மனிக்கு விரோதமான உணர்ச்சி நாளுக்கு நாள் அதிகப்படுகிறது. அந்த நாடுகளில் ஜெர்மனி அதிகத் துருப்புகளை வைத்திருக்கவேண்டியதாயிருக்கிறது. ஜெர்மனி உலகத்திலேயே மிகப்பெரிய தரைப்படையுள்ள ரஷ்யாவுடன் போராடிக்கொண்டிருக்கிறது. உலகத்திலேயே மிகப்பெரிய கடற்படையும், பலம் பொருந்திய தரைப்படையும், அதிகரித்துக்கொண்டுவரும் ஆகாய விமானப்படையும் உள்ள பிரிட்டனோடு போர் நடத்துகிறது. உலகத்திலேயே மிகப்பெரிய தொழிற்சாலை பலமுள்ள அமெரிக்காவின் விரோதத்தையும் சம்பாதித்திருக்கிறது.

ஜெர்மனி அதிக பலம் பொருந்தியதாயிருந்தாலும், வருகிற மாதங்களில் கஷ்டங்களும், தோல்விகளும், நேசதேசத்தார்களுக்குக் கொடுப்பதாயிருந்தாலும், ஒரு விஷயம் சுவற்றில் எழுதிய எழுத்தைப்போல விளக்கமாகத் தெரிகிறது. ஜெர்மனி இவைகளையெல்லாம் எதிர்த்துப் போர்புரிகிறது. எவ்வளவு காலம் பொறுத்து ஜெர்மனி தோல்வியடையும் [illegible] என்பது தான் பிரச்சினையே ஒழிய, தோல்வியடையும் என்பதைப்பற்றி யாதொரு சந்தேகமும் இல்லை.

ஆனால், இந்த நிலைமையில் யுத்தம் இந்தியாவை எவ்வளவு தூரம் நெருங்கி வந்திருக்கிறதென்பதை ஒவ்வொரு இந்தியரும் உணரவேண்டும்.

இராக்கில் ஏற்பட்ட கலகமும், இரானில் செய்யப்பட்ட சூழ்ச்சியும் வெற்றி பெற்றிருந்தால், ஜெர்மனி இந்தியாவின் வாயிற்படிக்கு, இந்தியாவுக்குள்ளும் வந்திருக்கலாம். இரானுக்கும், இந்தியாவுக்கும் மத்தியில், ஆப்கனிஸ்தானம்தான் இருக்கிறது.

இந்தியா இப்படிப்பட்ட ஆபத்தான நிலைமையிலிருந்தால், இந்தியத் துருப்புகள் ஆப்பிரிக்கா, சிரியா, இராக் முதலிய இடங்களுக்கு ஏன் அனுப்பப்படுகின்றன என்று சிலர் கேட்கிறார்கள். இது அறியாமையால் கேட்கப்படும் கேள்வி. இந்தியாவின் பாதுகாப்பு இந்தியாவின் கடற்கரைகளிலும், எல்லைகளிலும், இல்லை ; ஆப்பிரிக்கா, ரஷ்யா, இரான், இராக், சிரியா, இன்னும் சொல்லப்போனால் அட்லாண்டிக் கடலிலும் இந்தியப் பாதுகாப்பு யுத்தம் நடைபெறுகிறது. இந்தியாவின் எல்லைகள் இந்தியாவுக்கு வெளியில் ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் இருக்கின்றன."

## "V" வெற்றிக்கு அறிகுறி.

முடிவாக, மே. த. கவர்னர் சென்னை மாகாண மக்கள் யுத்த முயற்சிக்காகச் செய்த முயற்சியைப் பாராட்டிப் பேசி, வெற்றி கிடைக்கும் வரைக்கும் பலவித வழிகளில் உதவி செய்துகொண்டே யிருக்க வேண்டுமென்று கூறினார்.

யுத்தத்தின் இரண்டாவது வருஷக் கொண்டாட்டத்தின்போது விடுக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட வேண்டுகோளில், கவர்னர் பிரபு யுத்த நிலைமையைப் பற்றி, சுருக்கமாகக் கூறிவிட்டு "V" என்ற வெற்றிக்கறிகுறியைப்பற்றிக் குறிப்பிட்டார். மாகாண மக்கள் எல்லோரும் யுத்த முயற்சியை இரண்டு மடங்கு அதிகப்படுத்தி, விரைவில் வெற்றி பெறுவதற்கு உதவி செய்யவேண்டும் என்று கூறினார்.

---

## இரானில் அமைதி.

இரானில் ரஷ்யத் துருப்புகள் முன்னேற்றம் நிறுத்தப்பட்டது. ரஷ்யா, பிரிட்டன், இரான், இந்த மூன்று நாடுகளும் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டன. இரானைக் கைப்பற்றவேண்டுமென்ற

## பிரிட்டிஷ் ராயல் விமானப்படையில் பர்மிய ஆபிஸர்!




பிரிட்டிஷ் ராயல் விமானப்படையில் என்ஜினீர் ஆபிஸராக அமர்த்தப்பட்டிருக்கும் முதல் பர்மியர், 27 ஜெர்மன் விமானங்களை அழித்துப் பெருமையடைந்த தனது தலைவருடன் சேர்ந்து, ஒரு ஹரிகேன் விமானத்தைப் பரிசோதிப்பதைப் படத்தில் காணலாம்.

எண்ணம் நேசத்தேசத்தார்களுக்குக் கிடையாது. மிஸ்டர் அந்தோனி ஈடன் (பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி) இதைத் தம்முடைய பிரசங்கத்தில் விளக்கிக் கூறியிருக்கிறார்.

இரான் இந்த விஷயத்தை நன்றாக உணர்ந்திருக்கிறது. அதனால்தான் அதன் அரசர் தன்னுடைய துருப்புகளுக்குப் போரை நிறுத்தும்படியும் யாரையும் சுடக்கூடாதென்றும் கட்டளையிட்டார். இரானில் இப்போது பூரண அமைதி ஏற்பட்டிருக்கிறது.

## வாரச் செய்திக் குறிப்புகள்:

### ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் ஆகாய விமானப்போர்.

சென்ற வாரம் பிரிட்டிஷ் விமானப்படை ஜெர்மனியின் பல பாகங்களையும், வடக்கு பிரான்சையும், வழக்கம்போல வெடிகுண்டுகளால் தாக்கியது. வடமேற்கு ஜெர்மனியில், பிரெமென் துறைமுகப் பட்டணமும், கிழக்கு ஜெர்மனியில் பர்லின் என்ற ஜெர்மனியின் தலைநகரமும், பிராங்க்போர்ட் என்ற தொழிற்சாலைப் பட்டணமும், மேற்கு ஜெர்மனியில் ரூர், ரைன்லாந்து பிரதேசங்கள், எஸ்ஸென், கலோன், மான்ஹீம் முதலிய இடங்களும் தாக்கப்பட்டவைகளில் முக்கியமானவை.

கப்பற்சாலைகள் இருக்கும் இடங்களை பிரிட்டிஷ் விமானங்கள் நன்றாகத் தாக்கின. ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளாகிய பெல்ஜியத்தில் ஆஸ்டென்ட் என்ற கப்பற்பட்டணமும், பிரான்சில், டங்கர்க் என்ற துறைமுகப் பட்டணமும் பலமாகத் தாக்கப்பட்டன.

ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்சில், லீல் என்ற தொழிற்சாலைப் பட்டணம், பிரிட்டனி மாகாணத்திலுள்ள லானியன் என்ற ஜெர்மன் விமானத்தளம், ரூவன் பட்டணத்திற்கருகில் லாடிரெயிட் என்ற கப்பற்சாலைப் பட்டணம் இவைகளெல்லாம் பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டன. தாக்கின இடங்களிலெல்லாம் சேதம் உண்டாக்கப்பட்டது.

சென்ற வாரம், ஜெர்மன் விமானப்படை, இங்கிலாந்தில் சில பாகங்களில் வெடிகுண்டுகளைப் போட்டது. கிழக்கு இங்கிலாந்தின் கடற்கரைப் பிரதேசம், வடகிழக்கு இங்கிலாந்து, கிழக்கு ஆங்கிலியா, இவைகள் தாக்கப்பட்டன. வடகிழக்கு இங்கிலாந்தில் ஹல் என்ற துறைமுகப்பட்டணம் தாக்கப்பட்டது. தொழிலாளர் வசிக்கும் ஒரு இடத்தில் வெடிகுண்டுகள் போடப்பட்டன. குழந்தைகளுட்பட அநேகர் கொல்லப்பட்டனர். ஒரு பெண் தன்னுடைய மூன்று குழந்தைகள் கொல்லப்பட்ட காட்சியைக் கண்டு கதறிக் கொண்டிருந்தாள்.

ஆகஸ்ட்டு மாதம் முழுவதும், லண்டன் ஜெர்மன் விமானங்களால் தாக்கப்படவேயில்லை. சென்ற வருஷம் ஜூலை மாதம் முழுவதும் லண்டனுக்கு விமானத் தாக்குதல் கிடையாது.

சென்ற இரண்டு வருஷ யுத்தத்தில் 4,500 எதிரி விமானங்களுக்குமேல் சுட்டு வீழ்த்தப்பட்டன. 15 பிரிட்டிஷ் விமானங்கள், தலைக்கு 100 எதிரி விமானங்களை நாசம் செய்தன. மூன்று விமானங்கள் தலைக்கு 150 விமானங்களைச் சுட்டு வீழ்த்தின. ஒரு விமானம் 175 எதிரி விமானங்களை வீழ்த்தியிருக்கிறது. 1940-ம் வருஷம் வசந்த காலத்தில் பிரான்சில் வீழ்த்தப்பட்ட விமானங்களும் நார்வேயில் நடந்த சண்டையில் சுடப்பட்ட எதிரி விமானங்களும், தரையில் இருக்கும்போது அழிக்கப்பட்ட விமானங்களும், பழுதாக்கப்பட்டு நாசமடைந்திருக்கும் விமானங்களும், இந்த எதிரி விமான நஷ்டக் கணக்கில் சேர்க்கப்படவில்லை.

பிரிட்டன் 1,400 விமானங்களை இழந்தது. அவைகளில் இருந்த விமான ஓட்டிகளில் 450 பேர் உயிர் தப்புவிக்கப்பட்டார்கள்.

இந்த வருஷம், பிரிட்டிஷ் போர் விமானங்களும், விமான எதிர்ப்புப் பீரங்கிகளும் 1,000-க்கு மேல்

எதிரி விமானங்களை வீழ்த்தியிருக்கின்றன. இதில் 380, இராத்திரியில் வீழ்த்தப்பட்டன.

ஜூன் மாதத்தில், பகற் காலத்தில் விமானத் தாக்குதல் ஆரம்பித்த பிறகு, 480 எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. இதில் இழந்த பிரிட்டிஷ் விமானங்கள் 266 ; 28 பிரிட்டிஷ் விமானிகள் உயிர் தப்பினார்கள்.

ஒரு பிரிட்டிஷ் விமான ஓட்டி 32 எதிரி விமானங்களையும், வேறு நான்கு விமான ஓட்டிகள் தலைக்கு 20 எதிரி விமானங்களையும் சுட்டு வீழ்த்தி யிருக்கிறார்கள்.

### இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக்கடல்.

இத்தாலியையும், சிசிலியையும், பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் சென்ற வாரம் தாக்கின. தரை மீதிருந்த ஆகாய விமானங்கள் மேலும், கப்பற் சாலைகள் மேலும், வெடிமருந்துசாலைகள் மேலும், ரயில் பாதைகளின்மேலும், பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளைப்போட்டு, சேதம் உண்டாக்கின.

சூயஸ் கால்வாய் பிரதேசத்திலும், அலெக்சாண்டிரியா துறைமுகப்பட்டணத்திலும், எதிரி விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன.

வட ஆப்பிரிக்காவில், லிபியாவின் துறைமுகமும் கப்பற்சாலையும், பிரிட்டிஷாரால் தாக்கப்பட்டன. ஒரு வியாபாரக்கப்பல் முழுகடிக்கப்பட்டது. மற்றொரு கப்பல் நெருப்புக்கு இரையாக்கப்பட்டது. திரிபோலி துறைமுகத்துக்கு மேற்கில் உள்ள ரயில் பாதையையும், மெல்லாஹா என்ற இடத்திலுள்ள ஆகாய விமானக் கட்டடங்களையும், ரயில்வே ஸ்டேஷனையும், பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் தாக்கி சேதம் உண்டாக்கின.

பிரிட்டிஷ் விமானப்படையும், தென்னாப்பிரிக்க விமானப்படையும், பென்காசி துறைமுகத்தையும், பார்டியா துறைமுகத்தையும் தாக்கின.

தோப்ரூக் பிரதேசத்தில், 100 பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்கள் பல இடங்களில் எதிரியைத் தாக்கின. எதிரியிடமிருந்து ஒரு ஸ்தானம் கைப்பற்றப்பட்டது.

### அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

திங்கட்கிழமையன்று (செப்டெம்பர்மீ 1௳) "தொழிலாளர் நாள்" கொண்டாட்டத்தின்போது, அமெரிக்காவின் தலைவர் ரூஸ்வெல்ட் ஒரு பிரசங்கம் செய்தார். அதில், ஹிட்லரிசத்தை அடியோடு ஒழிப்பதற்காக, தொழிலாளர்கள் தங்களுடைய முயற்சியை அதிகப்படுத்தவேண்டுமென்று வற்புறுத்திக்கூறினார். ஹிட்லருடைய போக்கு தடைப்படுத்தப்பட்டது ; ஆகையால் சற்று சாவதானமாக வேலை செய்யலாம் என்று நினைப்பவர்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்திருக்கிறார். சுதந்தர வாழ்க்கையை அழிக்க முயலும் ஹிட்லரிசத்தை ஒழிப்பதற்காக அமெரிக்கா தன்னாலான எல்லா முயற்சியும் கட்டாயம் செய்யும் என்று பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் குறிப்பிட்டார். (அவருடைய பிரசங்கத்தின் சில பாகங்கள் இந்த இதழில் வேறோரிடத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன). தன்னைப்பொறுத்தவரையில், ஹிட்லரோடு சமாதானப்பேச்சு எப்போதும் வைத்துக்கொள்ளப்போவதில்லையென்றும், ஹிட்லருடைய மேஜையிலிருந்து விழும் ரொட்டித்துண்டுகளுக்காக அமெரிக்கா காத்திருக்கவில்லை என்றும் அவர் உறுதி கூறினார்.

பிரசிடெண்ட் ரூஸ்வெல்டின் பிரசங்கம் அமெரிக்கப் பத்திரிகைகளால் வரவேற்கப்பட்டிருக்கிறது. "தனிப்பட்ட முறையில் ஹிட்லரோடு போர் தொடுக்கப்பட்டது" என்று "நியூயார்க் டெய்லி நியூஸ்" பத்திரிகை பிரசங்கத்தைப்பற்றிக் கூறுகிறது. "நடுநிலைமையிலிருந்து தாண்டி, போரில் இறங்கியதுபோல் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் பேசியிருக்கிறார்" என்று "நியூ யார்க் டைம்ஸ்" பத்திரிகை எழுதியிருக்கிறது.

பிரிட்டிஷ் பத்திரிகைகள் ரூஸ்வெல்டின் பிரசங்கத்தைப் பாராட்டி எழுதியிருக்கின்றன. "ஹிட்லரை நேருக்குநேர் சண்டைக்கு அழைத்ததுபோல இருக்கிறது" என்று லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை கூறுகிறது.

அட்லாண்டிக் கடல் யுத்தத்தில், பிரிட்டனுடைய நிலைமையைப்பற்றி, பிரிட்டிஷ் கப்பற்படையைச்சேர்ந்த ஒருவர் விளக்கிக் கூறியிருக்கிறார். சென்ற இரண்டு வருஷங்களாக, கடல் வழியாக பிரிட்டனுக்கு வரும் வியாபாரம் தொடர்ந்து நடக்கிறது. பிரிட்டனுடைய கடல் வழிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இது பிரிட்டிஷ் கப்பற் பலத்தைக் காண்பிக்கிறது. ஜெர்மன் சப்மரீன்கள் பிரிட்டிஷ் கப்பல்களை முழுகடிப்பது குறைக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் கடற்படை விமானங்களில் 2,000 மணி நேரம் ஆகாயத்திலேயே இருந்து, சில விமானத்தலைவர்கள் எதிரிக்கப்பல்கள்மேல் கண்ணோட்டம் வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது.

### ரஷ்யாவும், பின்லாந்தும்.

ரஷ்யாவில் நடக்கும் யுத்தத்தில், ஜெர்மனியர்கள் தங்களுடைய லட்சியங்களில் ஒன்றையாவது இதுவரையில் கைப்பற்றமுடியவில்லை. அந்த லட்சியங்களில் ஒன்று லெனின் கிராட் என்ற பட்டணம். அதற்கருகில் 15 மைல்தூரம் முன்னேறிச் சென்றிருக்கிறதாக, ஜெர்மானியர்கள் கூறுகிறார்கள். ஆனால் இது உண்மையல்ல என்று "ராய்ட்டரின்" மாஸ்கோ நிருபர் கூறுகிறார்.

மத்தியப்பகுதியில், ரஷ்யர்கள் 10-நாள் சண்டையில் ஜெர்மானியர்களைப் பலமாக எதிர்த்து, 30-மைல் தூரம் பின்வாங்கி ஓடும்படி செய்துவிட்டார்கள். ஜெர்மானியர்கள் கைப்பற்றியிருந்த 22 கிராமங்களைப் பிடித்துக்கொண்டார்கள். திரும்பிப்பிடிக்கப்பட்ட கிராமங்களின் ஜனங்கள் முன்பு அழிக்கப்பட்ட பாலங்களை மறுபடியும் கட்டுகிறார்கள் ; அவசரமாக மாசூலை அறுவடை செய்கிறார்கள். சில மைல் தூரத்தில் சண்டை நடந்துகொண்டிருக்கிறது ஒவ்வொரு சமயத்தில் ஒரு வெடிகுண்டு வந்து விழுகிறது. ரஷ்யத்துருப்புகள் ஒளிந்துகொண்டிருக்கும் ஜெர்மானியர்களைப் பிடிப்பதற்காக, கிராமங்கள் முழுவதும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சென்ற செவ்வாய்க்கிழமை, ஜெர்மனியின் 135-வது காலாட் படையை ரஷ்யத்துருப்புகள் முறியடித்துவிட்டன. ஏராளமான யந்திர பீரங்கிகளும், டாங்கி-எதிர்ப்பு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

பின்லாந்து ரஷ்யாவுடன் தனிப்பட்ட சமாதானம் செய்து கொள்வதற்கு முயற்சிக்கிறது என்ற வதந்தி ஒரு ஜெர்மன் சமாச்சார ஸ்தாபனத்தில் மறுக்கப்பட்டது.

### பால்கன்ஸ், துருக்கி, இரான் முதலியன.

பிரிட்டன், ரஷ்யா, இரான்—இந்த மூன்று நாடுகளும் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன என்று கூறப்படுகிறது. பாதுவான கொள்கைகள் விஷயமாக மூன்று நாடுகளும் சம்மதித்திருப்பதாகத் தெரிகிறது.

சிம்லாவில் (இந்தியாவின் கோடைகால தலைநகரம்) உள்ள உத்தியோக வட்டாரங்கள் ஒரு முக்கியமான அபிப்பிராயத்தைத் தெரிவிக்கின்றன ; இரானிலுள்ள ஜெர்மானியர்களை, காலதாமதம் செய்யாமல் உடனே அப்புறப்படுத்தவேண்டியது அவசியம் என்று கூறுகின்றன.

இரானின் அரசர் ஷா டேஹரானை (இரானின் தலைநகரம்) விட்டுப்போய்விட்ட தாகக்கூறிய செய்தி பொய் யென்று அறிவிக்கப்பட்டது.

ஒரு ரஷ்ய ஆகாய விமானம் டேஹரானில் பல துண்டுப்பிரசுரங்களைப்போட்டது. அப்பிரசுரத்தில் கண்ட விஷயமாவது:—"இரானில் உள்ள எல்லா ஜெர்மானியர்களும் ஜெர்மனியின் வேவுகாரர்கள் ; அவர்கள் இரானிய மக்களுக்கு விரோதிகள் ; இரானியர்களைத் தங்களுக்கு அடிமைகளாக்க முயற்சி செய்கிறார்கள். இரானுடைய நேச நாடுகளாகிய பிரிட்டனோடும், ரஷ்யாவோடும் சண்டை செய்யும்படி இரானை இழுக்கிறார்கள். இரானிய மக்களே ! ஹிட்லர் இரானில் செய்துவரும் சூழ்ச்சிகளை ஒழிப்பதற்குக் காலம் வந்துவிட்டது. அதற்காகத்தான் பிரிட்டனும், ரஷ்யாவும் இரானில் பிரவேசித்தன. ஜெர்மனி கைப்பற்றிய நாடுகளை எப்படி அடிமையாக்கியதோ, அப்படியே இரானையும் அடிமையாக்க நினைத்தது. ஹிட்லரிசம் ஒழிக ! ரஷ்ய—இரான் நட்பு நீடூழி வாழ்க !"

இரானில் கண்டிப்பான முறைகளைக் கையாளவேண்டுமென்று லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை கூறுகிறது. இரானில் உள்ள ஜெர்மானியர்கள் உடனே வெளியேற்றப்படவேண்டும் ; துருக்கிக்கும், ஆப்கனிஸ்தானத்துக்கும் தப்பி ஓடிய ஜெர்மானியர்கள் கைது செய்யப்படவேண்டும், என்று அப்பத்திரிகை அறிவுறுத்துகிறது.

### கப்பல் நிலைமை.

சென்ற புதன்கிழமை வெளியான, ஒரு செய்தியில், யுத்தத்தில் கப்பல் நஷ்ட விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இதுவரைக்கும் கைப்பற்றப்பட்ட அல்லது முழுகடிக்கப்பட்ட எதிரிக்கப்பல்களின் மொத்த டன் எண்ணிகை 40 லட்சத்து 7 ஆயிரம். ஜூன் மாதம் வரைக்கும் நேசதேசக்கப்பல்கள் நஷ்டமானவை 1,738 கப்பல்கள்; அவைகளின் மொத்த டன் எண்ணக்கை 71 லட்சத்து 11 ஆயிரம். இதன் கணக்கு விவரங்கள் பின்வருமாறு :—

பிரிட்டிஷ் கப்பல்கள்: 1,078; எடை 46 லட்சம் டன்னுக்கு மேற்பட்டது.

நேசதேசக்கப்பல்கள் : 334; எடை சுமார் 15 லட்சம் டன்.

நடு நிலைமை நாட்டுக்கப்பல்கள் : 326; 10 லட்சம் டன்னுக்கு மேற்பட்டது.

### தூரக்கிழக்கு அரங்கம்.

சீன-ஜப்பான் யுத்தத்தைப்பற்றி, டாக்டர் வெல்லிங்டன்கூ, சென்ற செவ்வாய்க்கிழமை, லண்டனில் பேசினர். டாக்டர் கூ லண்டனில் உள்ள சீன ஸ்தானீகர் (பிரதிநிதி). அவர் பேசியதன் சுருக்கம் பின்வருமாறு :—

சீன-ஜப்பான் யுத்தம் நான்கு வருஷங்களுக்கு முன், அதாவது 1937-ம்ஞு ஜூலையீ, ஆரம்பித்தது. சில மாதங்கள் வரைக்கும் தான் சீன எதிர்த்துப் போராடும் என்று எல்லோரும் நினைத்தார்கள். 1937-ம்ஞு ப்ரஸ்ஸல்ஸில் (ஐரோப்பாவில் உள்ள பெல்ஜியம் என்ற நாட்டின் தலைநகரம்) நடந்த மகாநாட்டில் ஒரு பந்தயம் கட்டப்பட்டது. ஐரோப்பிய தூதுக்கோஷ்டியைச் சேர்ந்த ஒரு தூரக்கிழக்கு அரங்க நிபுணர்தான் பந்தயம் போட்டவர். இந்த வருஷம் (1937) முடிவதற்குள், சீன யுத்தத்தில் தோற்றுப் போய்விடும் என்று அவர் உறுதியாகக்கூறி, பந்தயம் கட்டினர். ஆனல் நான்கு வருஷங்களாக யுத்தம் நடந்து வருகிறது. சீனப்பட்டாளம் இன்னும் யுத்த மேடையில் போர் புரிந்து கொண்டுதான் இருக்கிறது.

முடிவாக, டாக்டர் வெல்லிங்டன் கூ கூறியதாவது :—இன்னும், ஆறு வாரங்கள் போனபிறகு, ஆசியாவில் நடக்கும் யுத்தம், உலக மகாயுத்த காலத்தை (நான்கு வருஷத்தை) தாண்டிவிடும்.

அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட்டும், ஜப்பானிய ஸ்தானீகர் அட்மிரல் நோமுராவும், சந்தித்துப் பேசியதைப்பற்றி சீனவில் பல அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டன. அமெரிக்கா, சீனவைக் கைநழுவ விட்டுவிடாதென்று சொல்லப்படுகிறது. தூரக்கிழக்கு அரங்கப் பிரச்சினை சீக்கிரம் தீர்ந்துவிடாது ; ஏனென்றல் ஜப்பானுடைய நோக்கமும், அமெரிக்காவின் நோக்கமும் ஒன்றுக்கொன்று சமாதானமில்லாத நோக்கங்கள். கிழக்கு ஆசியாவில் தன்னுடைய ஆதிக்கம் நிலைபெறவேண்டுமென்று ஜப்பான் விரும்புகிறது. சீனவிலிருந்து முழுவதும் விலகுவதற்கு ஜப்பானுக்கு இஷ்டமில்லை. எந்த ஏற்பாடு நடந்தாலும் சர்ச்சில்—ரூஸ்வெல்ட் அறிக்கையின் கொள்கைளைப் பின்பற்றித்தான் நடக்கும் என்று சீனவில் எதிர்பார்க்கிறார்கள்.

ஒரு சுழற்காற்றுக்கு மத்தியில் காற்று இல்லாத பிரதேசத்தில் ஒரு கப்பல் இருப்பதுபோல, அமெரிக்கா—ஜப்பான் தொடர்பு இருக்கிறது. அமெரிக்க அரசியல் மந்திரி, மிஸ்டர் கார்டெல்ஹல் அமெரிக்காவின் நிலைமையைப் பின்வருமாறு விளக்கியிருக்கிறார் :—1937-ம்ஞு வெளியான அறிக்கை இப்போதும் பின்பற்றப்படவேண்டும். தூரக்கிழக்கு அரங்கத்தில் அமெரிக்க உரிமைகளும், சுதந்தரங்களும் காப்பாற்றப்படவேண்டும்; சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகளைக் கண்டிப்பாகக் கீழ்ப்படியவேண்டும். உடன்படிக்கைகளில் மாறுதல் ஏற்படவேண்டும் என்ற விருப்பம் இருந்தால், சமாதானமுறையில் அமெரிக்காவுடன் பேசி முடிக்கலாமே ஒழிய, முரட்டுத்தனத்தாலாவது, பயமுறுத்தலினாவது காரியத்தைச் சாதிக்கமுடியாது.

தூரக்கிழக்கு அரங்க அகில தேசிய மகாநாட்டை, தாய்லாந்தின் மூலமாக, ஜப்பான் கூட்டவிரும்புகிறதென்று தெரிகிறது. பிரிட்டன், அமெரிக்கா, சீன, டச்சுக்கிழக்கிந்திய தீவுகள், ஜப்பான், நியூஜிலாந்து, ஆஸ்திரேலியா, பிலிப்பைன் தீவுகள், இண்டோ-சீன இந்த நாடுகளெல்லாம் அம்மகாநாட்டுக்கு அழைக்கப்படும். பசிபிக் பிரச்சினைகளைப்பற்றிப் பேசுவதற்காகக் கூடுவதுதான் மகாநாட்டின் நோக்கம்.

ஜப்பானுக்கும், அச்சுநாடுகளுக்கும் (ஜெர்மனி, இத்தாலி) அபிப்பிராயபேதங்கள் இருப்பதாகத் தெரிகிறது. ஹிட்லரும், முசலோனியும் சந்திக்கப் போவதாக வெளியிடப்பட்ட அறிக்கையில் ஜப்பானைப் பற்றி ஒரு வார்த்தைகூடக் கூறவில்லை.

தூரக்கிழக்கு அரங்கத்திலிருந்து, அமெரிக்கர்கள் தம்முடைய தாய்நாட்டுக்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள். சென்ற திங்கட்கிழமை 38 அமெரிக்கர்கள் "பிரசிடெண்ட் கார் பீல்டு" என்ற கப்பலில் ஏறி அமெரிக்காவுக்குப் புறப்பட்டார்கள்.

ஜப்பானில் அச்சு நாடுகளுக்கு விரோதமாக அபிப்பிராயம் இருந்து வருவதாகத் தெரிகிறது. ஒரு அரசியல் மாறுதல் ஏற்படலாமென்று எதிர் பார்க்கப்படுகிறது. முன்பு அயல் நாட்டு மந்திரியாயிருந்த மிஸ்டர் மத்சூகா அச்சு நாட்டு விரோத இயக்கத்துக்குத் தலைவராக இருக்கிறரென்று கூறப்படுகிறது.

ஜப்பானுடைய போக்கைப்பற்றி ஜெர்மனிக்கு கவலை உண்டாயிருப்பதாகத் தெரிகிறது. மிஸ்டர் மத்சூகாவைப்பற்றி ஒரு ருசிகரமான வதந்தி உலவுவதுதான் இதற்குக் காரணம். மிஸ்டர் மத்சூகா வேண்டுமென்றே தன்னுடைய மந்திரி பதவியை ராஜிநாமாசெய்து, அமெரிக்காவுக்கு நண்பரான அட்மிரல் தோயாடாவை அப்பதவியில் நியமிப்பதற்கு உதவிசெய்தார் என்று கூறப்படுகிறது. ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுவதற்காக இம்மாதிரி செய்யப்பட்டதென்று தெரிகிறது.

### விஷி.

விஷி அரசாங்கம், ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்படாத பிரான்சு தேசத்தை ஆளுகிறது. அதனுடைய முதல் மந்திரியாகிய மார்ஷல் பீத்தான், ஜெர்மனியோடும் இத்தாலியோடும் ஒரு சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளப்போவதாகத் தெரிகிறது. விஷியின் அயல் நாட்டு மந்திரியாகிய அட்மிரல் தார்லான் சென்ற சில நாட்களாக அடிக்கடி பாரிசுக்கு (ஜெர்மானியரின் ஆதிக்கத்தில் இருக்கும் பிரான்சின் தலை நகரம்) போய்க்கொண்டிருக்கிறர். இதனல் அந்த வதந்தி உண்மையாயிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

ஹிட்லரும், முசலோனியும் சந்தித்து ஐரோப்பாவில் தங்களால் ஏற்படுத்தப்படும் "புதிய சமுதாய திட்டத்"தில் பிரான்சைச் சேரும்படி கட்டாயப் படுத்துவதாகத்தெரிகிறது. முசலோனியின் பத்திரிகை "பொபோலேதித்தாலியா" கூறுவதாவது :—"புதிய ஐரோப்பாவில் எல்லா மக்களுக்கும் இடம் இருக்கிறது." இதன் கருத்து என்னவென்றல், விஷி அரசாங்கமும் ஹிட்லர்—முசலோனி ஏற்படுத்தும் "புதிய சமுதாயத் திட்டத்"தில் சேரவேண்டும் என்பதுதான்.

மிஸ்டர் லவால் என்ற பிரெஞ்சு மாஜி முதல் மந்திரியும், அவருடன் கூட இருந்த மிஸ்டர் டீட் என்பவரும், சில நாட்களுக்கு முன் ஒருவனல் சுடப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்கள். மிஸ்டர் லவால், ஹிட்லருக்கு ரொம்பவும் வேண்டியவர். அவர் சுடப்பட்ட பிறகு, ஆக்கிரமித்த பிரான்சில் பொது உடைமைக் கட்சிக்காரர்களை ('கம்யூனிஸ்ட்') எல்லாம் கைதுசெய்து கொடிய தண்டனை விதிக்கிறார்கள். பாரிசில், பொதுவுடமைக் கிளைச் சங்கங்கள் ஏற்படுத்த முயன்றதாக இரண்டுபேர் குற்றம் சாட்டப்பட்டார்கள்; அவர்களுக்கு 20 வருஷ கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. பொது உடமைப் பிரசுரத்துண்டுப் பிரசுரங்களை, பலருக்குக் கொடுத்ததற்காக, இரண்டு பெண் பிள்ளைகள் 12 வருஷ கடுங்காவல் தண்டனை கொடுக்கப்பட்டார்கள். வேறு ஐந்துபேர் 2 வருஷ முதல் 5 வருஷ வரை சிறைத் தண்டனையும், 10,300 பிராங்குகள் (பிரெஞ்சு நாணயம்) மொத்த அபராதமும் விதிக்கப்பட்டார்கள். இதல்லாமல் பாரிசில், 41 பேருக்கு 3 அல்லது 4 மாத சிறைத்தண்டனை கொடுக்கப்பட்டது; அவர்கள் ஒவ்வொருவருக்கும் 1,000 பிராங்குகள் அபராதம் போடப்பட்டது. தண்டனையைப்பற்றி மேல் குறித்த விவரங்கள் விஷி சமாச்சார ஸ்தாபனம் அனுப்பிய செய்திகளிலிருந்து எடுக்கப்பட்டது.

### ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகள்.

ரஷ்யாவின்மேல் படையெடுக்கும்படி, பல்கேரியாவை ஜெர்மனி தூண்டிற்று. ஆனால் படையெடுப்பதற்கோ, அல்லது ரஷ்யாவுக்கு எதிராக துருப்புகள் அனுப்புவதற்காகவோ மறுத்துவிட்டது.

ஜெர்மானியர்களுடைய ஆட்சியின்கீழ் 80 லட்சம் டச்சு மக்கள் (ஹாலந்து நாட்டினர்) கஷ்டப்படுகிறார்கள். நெதர்லாந்து முதல் மந்திரி, டாக்டர் கெர்பிராண்டி, சென்ற திங்கட்கிழமை, லண்டன் ரேடியோவிலிருந்து அமெரிக்காவுக்கு, இதைக் குறித்து, ஒரு பிரசங்கம் செய்தார். அவர் கூறியதாவது :—

"நீங்கள் (அமெரிக்கர்கள்) டச்சு மக்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறீர்கள். ஹிட்லர் கழுத்தைப்பிடித்து நெறித்துக்கொண்டிருக்கும் போதுகூட, உங்களுடைய உதவி சரியான காலத்தில் வரும் என்று அவர்கள் நிச்சயமாக நம்புகிறார்கள்.

"இப்போது என்னுடன் கூட அரசியலில் சகாக்களாக இருந்த எல்லா நண்பர்களும் சிறைச்சாலையில் இருக்கிறார்கள். சர்வகலாசாலை ஆசிரியர்கள் பலர் கைதிக் கொட்டடிகளில் இருக்கிறார்கள். தேசபக்தர்களெல்லாம் கொல்லப்பட்டார்கள். திருடர்களும் அயோக்கியர்களும் பெரிய பதவிகளில் இருக்கிறார்கள். அடிப்பது, சித்திரவதை செய்வது முதலியன அரசியல் ஆயுதங்களாக உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஜெர்மன் தொழிற்சாலைகளில் வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். விசாரணைகள் பகிரங்கமாக நடை பெறுவதில்லை ; கதவு சாத்தப்பட்ட அறைகளில் நடக்கின்றன. சிறைச்சாலைகள் நிரம்பியிருக்கின்றன.

"சுதந்தரம் என்ற மரத்தை அடியோடு வெட்டுவதற்கு முயற்சிக்கிறார்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன் நெதர்லாந்தில் வேரூன்றிய சுதந்தரம் இப்போது அழிக்கப்பட்டது. ஐரோப்பா முழுவதும் ஒரு பெரிய சிறைச்சாலையாய் விளங்குகிறது. சிறைச்சாலையின் காவலாளனான ஹிட்லருக்கு நியாயம் என்பது இன்னதென்று தெரியாது ; முரட்டுத்தனம் தான் தெரியும்."

பெல்ஜியத்திலுள்ள ஆஸ்பத்திரிகள் ஜெர்மானியர்களால் காலி செய்யப்பட்டன. அவைகளிலுள்ள நோயாளிகள் வெளியேற்றப்பட்டார்கள். யுத்தத்தில் காயப்பட்ட 40,000 ஜெர்மானியர்களின் உபயோகத்திற்காக ஆஸ்பத்திரிகள் காலியாக்கப்பட்டன.

### நடுநிலைமை நாடுகள்.

யுத்தத்தின் மூன்றாவது வருஷம் ஆரம்பிப்பதற்குமுன், தாய்லாந்து (பர்மாவுக்கு தென் கிழக்கில் உள்ள நாடு) அரசாங்கம் ஒரு சமாதான அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. போரில் ஈடுபட்டவர்கள், மதஸ்தாபனங்கள், கல்விச்சாலைகள், தர்மநிலையங்கள், இவைகளெல்லாம் உலகத்தில் சமாதானத்தை நிலை நிறுத்தவேண்டுமென்று தாய்லாந்து அரசாங்கம் வேண்டிக்கொள்ளுகிறது. தாய்லாந்து மக்கள் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். புத்த மதம் சகோதரத்துவத்தையும், சமாதானத்தையும், சந்தோஷத்தையும் விரும்புகிறது. தாய்லாந்து சிறிய நாடாயிருந்தாலும், சமாதானத்தை மீண்டும் நிலை நிறுத்தும்படி வல்லரசுகளை வேண்டிக்கொள்ளுகிறது என்று அந்த அறிக்கை கூறுகிறது.

மெக்சிகோ (வட அமெரிக்காவின் தெற்குப் பாகம்) ஜெர்மனியின் ஆக்கிரமிப்பைக் கண்டித்து, குடியரசுகளுக்கு ஆதரவு அளிக்கிறது. இந்த அபிப்பிராயம், மெக்சிகன் காங்கிரஸ் கூட்டத்தில், மெக்சிகன் தலைவர், அவீலா காமாசோவால் தெரிவிக்கப்பட்டது. ஜெர்மனி, பிரான்சு, இத்தாலி, போர்ச்சுகல், ஸ்வீடன், இவைகளிலுள்ள மெக்சிகோவின் ஸ்தானீகக் காரியாலங்கள் மூடப்படவில்லை ; ஆனால், நார்வே, போலந்து, பெல்ஜியம், டென்மார்க், ஹாலந்து முதலிய ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளுடன் மெக்சிகோ சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கிறது என்று பிரசிடெண்ட் காமாசோ கூறினார்.

முடிவாக, மெக்சிகோவின் தலைவர் கூறியதாவது : "நாம் இந்தப் போருக்கு வெளியில் இருக்க ஆசைப்படுகிறோம். ஆனால் எங்களுடைய சுதந்தரத்தையும், அமெரிக்காவின் சுதந்தரத்தையும் பாதிக்கும்படியான நிலைமை ஏற்பட்டால், மெக்சிகோ தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவும், சுதந்தரத்தை நிலைநிறுத்துவதற்காகவும் தயாராயிருக்கும்".

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.**
[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

---

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.